## FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029150

1. District : மாவட்டம் : சேலம். PS: காவல்நிலையம் : ஊ.த.க.பிரி/1 Year: ஆண்டு : 2018. FIR No.: மு.த.அ. எண் : 04/AC/2018 Date: நாள் : 26.01.2018.

2. (i) Act சட்டம்: ஊ.த. சட்டம் 1988. Sections பிரிவுகள்: 7 of PC Act.

   (ii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

   (iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   1) 17.01.2018 – மாலை, சேலம் மத்தியச் சிறைச்சாலை.

   2) 25.01.2018 - 10.30 மணி, சேலம் மத்திய சிறைச்சாலை.

   3) 25.01.2018 - 15.00 மணி, சிந்து கண் மருத்துவமனை அருகில் ஏற்காடு ரோடு, சேலம்.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.01.2018 Time : நேரம் 1700 hs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.01.2018 Time : நேரம் 1700 hs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ வடக்கு.

   Beat Number : முறைக் காவல் எண் -

   (b) Address : முகவரி சேலம் மத்திய சிறைச்சாலை சேலம், மற்றும் சிந்து கண் மருத்துவமனை அருகில், ஏற்காடு ரோடு சேலம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.N. மகேந்திரகுமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. கலியசாமி.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி க.எண் 547, [illegible] தயிர்பாளையம், தயிர்பாளையம் அஞ்சல், சித்தோடு வழி, ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. விஜயகுமார், R2. கிளார்க், சேலம் மத்திய சிறைச்சாலை, சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   -

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) -

அபராவின் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26-01-2018 - 09.30 hrs.

Name: பெயர் தங்கமணி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
ஊதகமாரி சேலம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>

25.01.2018ம் தேதி மாலை 17.00 மணிக்கு T.N.மகேந்திரகுமார், த.பெ.K.நல்லசாமி, க.எண்– 547, வடக்கு தயிர் பாளையம், தயிர்பாளையம் அஞ்சல், சித்தோடு வழி, ஈரோடு மாவட்டம் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு

அனுப்புதல், T.N.மகேந்திரகுமார், த.பெ.K.நல்லசாமி, க.எண்– 547, வடக்கு தயிர் பாளையம், தயிர்பாளையம் அஞ்சல், சித்தோடு வழி, ஈரோடு மாவட்டம். பெறுதல், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, சேலம். அய்யா, நான் ஈரோடு மாவட்டம், சித்தோடு, வடக்கு தயிர்பாளையத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் டிப்ளோமோ படிப்பு படித்துள்ளேன். எனக்கு வடக்கு தயிர்பாளையத்தில் எனது தந்தைக்கு சொந்தமான 4 ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். நானும், ஈரோடு, வீரப்பன் சத்திரத்தை சேர்ந்த முனுசாமி மகன் சரவணன் என்பவரும் நெருங்கிய நண்பர்கள் ஆவோம். சரவணன் கடந்த 2001 ம் வருடம் ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் நடந்த ஒரு கொலை வழக்கில் கருங்கல்பாளையம் போலீசாரால் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றும், மேலும் ஒரு வழிப்பறி வழக்கில் தண்டனை பெற்றும் கடந்த 17 வருடமாக சிறையில் இருந்து வருகிறார். அவர் 2013 வரை கோவை மத்திய சிறையிலும், அதன் பிறகு சேலம் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு சிறை கைதியாக இருந்து வருகிறார். மேற்படி சரவணனின் மகள் சரண்யாவுக்கு திருமணம் ஆகி அவர் தற்போது அவரது கணவருடன் சென்னையில் வசித்து வருகிறார். சரவணன் அவரது மகளை பார்க்க சிறையில் இருந்து விடுப்புபெற்று சென்னை சென்றுவர மிகுந்த சிரமமாக இருந்ததாகவும் அதனால் தான் சென்னை புழல் சிறைக்கு மாறுதல் பெற்று செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பதாக சொல்லியிருந்தார். நான் பழனி மலைக்கு கடந்த 16.01.2018 ம் தேதி மாலை தைப்பூசத்தை முன்னிட்டு நான் பாதயாத்திரை சென்று வந்தேன். அந்த சூழ்நிலையில் நான் பழனி மலையில் இருந்து வந்தபிறகு மேற்படி சரவணன் பரோல் பெற்று வந்திருப்பதாக தகவல் தெரிந்தது. நான் நேற்று 24.01.2018ம் தேதி சாயங்காலம் சுமார் 0600 மணிக்கு ஈரோடு, வீரப்பன் சத்திரத்தில் உள்ள சரவணன் வீட்டிற்கு சரவணனை பார்க்க சென்றபோது அவர் பரோல் முடிந்து அன்று மாலை நான் போவதற்கு முன்பே சேலம் மத்திய சிறைக்கு சென்றுவிட்டதாகவும், என்னை வந்து கேட்டால் சிறையில் மனு போட்டு பார்க்க சொல்லி சென்றதாகவும் அவர் மனைவி கற்பகம் என்னிடம் சொன்னார். அதன்பேரில் நான் இன்று 25.01.2018 அன்று பகல் 2.00 மணி சுமாருக்கு சேலம் மத்திய சிறைசாலைக்கு சென்று மனுபோட்டு,

எனது நண்பர் சரவணனை நேர்காணல் அறையில் சந்தித்து பேசினேன். அப்போது சரவணன என்னிடம் R2 கிளார்க் விஜயகுமார் தன்னிடம் ஏற்கனவே தான் சென்னை புழல் சிறைக்கு தன்னை மாற்றும்படி கொடுத்த மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து புழல் சிறைக்கு மாற்றம் செய்ய ஏற்பாடு செய்து கொடுப்பதாகவும், அதற்காக தனக்கு ரூ.10,000/– தனியாக கொடுக்க வேண்டும் என்று 17.01.18 அன்று மாலை சேலம் மத்திய சிறைசாலையில் வைத்து தான் பரோலில் செல்லும்போது கேட்டதாகவும், அதற்கு சரவணன் தான் ஏற்கனவே மிகுந்த பண கஷ்டத்தில் இருப்பதாக சொன்னதாகவும் என்னிடம் சொன்னார். மேலும், சரவணன் பரோல் முடித்து நேற்று 24.01.18 ம் தேதி மாலை சிறைக்கு வந்துவிட்டதாகவும், இன்று 25.01.18 ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு சிறைச்சாலைக்குள் என்னை மீண்டும் சந்தித்து புழல் சிறைக்கு மாற்றுவதற்காக தான் ஏற்கனவே கேட்ட ரூ.10,000/– த்தை பற்றி கேட்டதாகவும், அதற்கு சரவணன் தன்னால் பரோலில் இருந்தபோது பணம் ரெடி செய்ய முடியவில்லை என்றும், தனது நண்பர் மகேந்திரகுமார் பழனி கோவிலுக்கு சென்றுவிட்டதால் தன்னால் ஏற்பாடு செய்ய முடியவில்லை என்றும், அவர் வந்ததும் அவர் மூலம் பணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுப்பதாக சொன்னதாகவும் சொன்னார். மேலும் சரவணன் என்னிடம் தான் எப்படியாவது புழல் சிறைக்கு போக வேண்டும் என்றும், ஆனால் விஜயகுமார் பணம் வாங்காமல் எந்த வேலையும் செய்ய மாட்டார் என்றும், அதனால் என்னை சிறைக்கு வெளியில் காத்திருக்கும்படியும், நான் வந்திருக்கும் விவரத்தை உடனே விஜயகுமாரிடம் தெரிவிப்பதாகவும், விஜயகுமார் என்னை போனில் தொடர்பு கொள்வார் என்றும், அவரை நேரில் பார்த்து பேசி அவர் சொல்லும்படி செய்யுமாறு கூறினார். அதன்படி நான் சிறைச்சாலைக்கு வெளியே சென்று காத்திருந்தேன். அப்போது விஜயகுமார் மதியம் சுமார் 2.55 மணிக்கு செல்போன் எண்– 8825500242 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் 9659777007 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு எங்கு இருக்கிங்க என்று கேட்டார். நான் ஜெயில் மெயின் கேட்டிற்கு வெளியே சிந்து கண் மருத்துவமனை அருகில் மெயின் ரோட்டில் நிற்பதாக சொன்னேன். அவர் அங்கேயே இருப்பதாக சொல்லிவிட்டு 5 நிமிடத்திலேயே மேற்படி இடத்திற்கு வந்து, என்னிடம் சந்தித்து நீங்கள் தான் மகேந்திரகுமாரா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் சரவணனின் நண்பர் என்று சொன்னேன். அப்பொழுது சரவணன் எதாவது சொன்னாரா என்று கேட்டார். அதற்கு நான் விஜயகுமார் சார் வருவார் அவரிடம் என்னுடைய சிறை மாற்றம் குறித்து பேசும்படி சொன்னார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரவணன் பணம் ஏதாவது கொடுக்க சொன்னாரா என்று கேட்டார். ஆமாம் சார், சார் கேட்கும் பணத்தை ஏற்பாடு செய்து கொடுக்கும்படி சொன்னார் என்று சொல்லி எவ்வளவு சார் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/– கொடுக்க வேண்டும்

என்றும், நாளைக்கு அந்த பணத்தைக் கொடுக்கும்படியும் அப்போதுதான் விரைவாக நடவடிக்கை எடுத்து சிறை மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும் சொன்னார். நான் எங்கு வரவேண்டும் சார் என்று கேட்டதற்கு அவர் நாளைக்கு அஸ்தம்பட்டிக்கு வந்து விட்டு தன்னை போனில் கூப்பிடும்படியும் தான் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்வதாகவும் சொன்னார். நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனது நண்பன் சரவணன் மிகுந்த கஷ்டத்தில் இருப்பதால் அவருடைய சிறைமாற்றத்திற்கு மத்திய சிறைச்சாலை கிளார்க் விஜயகுமாருக்கு ரூ.10,000/– லஞ்சமாக கொடுக்க நான் விருப்பமில்லை. எனவே விஜயகுமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 25.01.2018. (T.N.Mahendrakumar).

Sir, Received the above computer typed complaint on 25.01.2018 at 17.00 hrs and registered a preliminary enquiry in PE.20/2018/PRISON/SL at 18.00hrs on 25.01.2018 Sd xxxx 25.01.2018. (P.THANGAMANI), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

During verification, the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through the sources. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.4/AC/2018 u/s 7 of PC Act 1988 at 8.00 hrs today on 26.01.2018 and took up for investigation. Sd xxxx 26.01.2018 (P.THANGAMANI), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original typed complaint of T.N.Mahendrakumar, S/o.K.Nallasamy, D.No.547, V.Thayirpalayam, Thayirpalayam-Po, Chithode Via, Erode District is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

26/01/18

(P.THANGAMANI),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.